1972 ஆகஸ்ட் 22]

(இ) இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) நமது மாநிலத்தில் சிறப்புக்காப்பு இல்லங்கள், புதுவாழ்வு இல்லங்கள் மூன்று கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :—

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் பானூர்.
2. தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை.
3. தருமபுரி மாவட்டத்தில் பர்கூர்.

(இ) இலவச இடவசதி, உணவு வசதி தவிர இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ உதவியும் அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு துணியும், படுக்கையும் கொடுக்கப்படுகிறது. பாய் முடைதல், சோப்பு தயாரித்தல், பிஸ்கெட் தயாரித்தல் முதலிய சில புதுவாழ்வுப்பணிகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்கள் அனைத்திலும் கோழிப்பண்ணைகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இல்லங்களில் உள்ள அனைவரையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவந்து அவர்களை உரிய ஆதாயமுள்ள வேலைகளில் அமர்த்தி அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே முடிவான நோக்கமாகும்.

Estate Employees.

*193. Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the staff previously employed in estates and retained in Government service after the abolition of the estates, are eligible for any pension after retirement; and

(b) if so, whether they have been paid the same?

எஸ்டேட் பணியாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) முன்பு எஸ்டேட்டுகளில் பணி புரிந்து எஸ்டேட்டு ஒழிப்புக்குப் பின்னர் அரசுப் பணியில் வைத்துக்கொள்ளப்பட்ட பணியாளர்கள், அவர்களுடைய ஓய்வுகாலத்திற்குப் பிறகு ஓய்வூதியம் ஏதேனும் பெறத் தகுதியுடையவர்களா?

(இ) ஆம் எனில், அதற்காக அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) எஸ்டேட் ஊழியர்களின் ஓய்வூதிய மனுக்கள் மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்தில் இறுதி முடிவு எடுக்கப்படாமல் இருக்கின்றன. அவர் சில பொருள்கள் குறித்து விளக்கங்கள் கேட்டுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, முன்பு எஸ்டேட்டுகளில் பணி புரிந்துவிட்டு எஸ்டேட்டு ஒழிப்புக்குப் பின்னர் அரசுப் பணியில் வைக்கப் பட்டிருந்து ஓய்வுபெற்ற பலருக்கும் பென்ஷன், கிராசுவிடி அனைத்தும் கொடுக் கப்பட்டாகிவிட்டது. ஆனாலும் 1967-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்கள் யாருக்கும் இந்த ஓய்வு ஊதியங்கள் இது வரையில் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. அவர்களில் ஓரிருவர் இறந்துகூடப் போய்விட்டார்கள். இதில் ஏன் ஏழாண்டுகால தாமதம் ஏற்பட வேண்டுமென்று தெரியவில்லை. ஒரு சாராருக்குக் கொடுக்கப்பட்டு, பின்னர் திடீரென்று ஏன் இப்போது நிறுத்தி யிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதில் அக்கௌண் டண்டு-ஜெனரல் சில சந்தேகங்களை எழுப்பியிருக்கின்றார்கள். அவை இன் னும் அரசுக்கும் அக்கௌண்டண்டு-ஜெனரலுக்கும் கடிதப்போக்குவரத்தில் இருந்து வருகின்றன. சீக்கிரமே இவற்றின் மீது நடவடிக்கை எடுத்து முடிவு காண இருக்கிறோம்.

Sales Tax.

* 194. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to adopt daily Sales Tax collection in this State; and

(*b*) if so, the details thereof ?

விற்பனை வரி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம் மாநிலத்தில் அன்றாட விற்பனை வரி வசூல் முறையைப் பின் பற்றுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?